செ.வெ. எண்:020 நாள்: 07.01.2017

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி மாணவர் / மாணவியருக்கான அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 100க்கு 100 மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு தலா 1000 ரூபாய் வீதம் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கிட சட்ட பேரவையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 69 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந 1 (2))த் துறை நாள்: 15.12.2016–ல் அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல அரசு பள்ளி விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத் தேர்வுகளில் 100க்கு 100 மதிப்பெண் பெறும் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அரசின் ஊக்கத் தொகையான ரூ1000/–த்தை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**